### அய்யன் ஏரி தூர்வாரும் பணிக்கு அடிக்கல்!

# கடலூர் மாவட்டம் - தாழை ஓடையில் புதிய பாலம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், பிப். 12-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., முன்னிலையில் கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் அமைந்துள்ள அய்யன் ஏரியினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் 15வது மத்திய நிதிக்குழு திட்டங்களின் கீழ் ரூ.192.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி புனரமைப்பு பணிக்கு நேற்று (11.02.2025) அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் அயன் குறிஞ்சிப்பாடி தாழை ஓடையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

முன்னதாக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 154ஆம் ஆண்டு ஜோதி தரிசன விழாவினை முன்னிட்டு வடலூர் திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் ஜோதி தரிசனத்தினை வழிபட்டார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் மற்றும் நகர்ப்புற,கிராமப்புற பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் வடலூர் நகராட்சியில் சாலை மற்றும் குளம் புனரமைப்பு பணி, பள்ளிகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல், பூங்கா அமைத்தல் உள்ளிட்ட 34 பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும், ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய கழிப்பறை, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி உட்பட 27 பணிகள் நடைபெற்று வருகிறது. வடலூர் நகராட்சி பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகளாக ரூ.5305 இலட்சம் மதிப்பீட்டில் 61 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடலூர் நகராட்சியின் கடலூர்-விருத்தாச்சலம் தேசிய நெடுஞ்சாலையின் அருகே உள்ள அய்யன் ஏரி 77200 சதுர மீட்டர் பரப்பளவை கொண்டது. அய்யன் ஏரி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், அய்யன் ஏரி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதனால் நீர்பிடிப்பு அளவு அதிகரிப்பதுடன் அப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளாக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம், 15ஆவது நிதி குழு மான்யம், நமக்கு நாமே திட்டம், மூலதன மானிய நிதி திட்டம், அம்ருத் 2.0 உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.16.27 கோடி மதிப்பீட்டில் 47 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ரூ.34 கோடி மதிப்பீட்டல் 14 திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

அயன் குறிஞ்சிப்பாடி பகுதியில் உள்ள விவசாய பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த தாழை ஓடை பாலம் தற்போது ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு இன்றைய தினம் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 120 ஏக்கர் விவசாய நிலத்தின் அறுவடை பொருட்கள் மற்றம் இடு பொருட்களை கொண்டு சென்று விவசாயிகள் பயனடையும் வகையில் இப்பாலம் அமைந்துள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடலூர் நகரமன்ற தலைவர் சிவக்குமார், துணைத் தலைவர் சுப்புராயலு, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், பேரூராட்சி துணைத்தலைவர் ராமர், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் வெங்கடேசன், வடலூர் நகராட்சி ஆணையாளர் ரஞ்சிதா, செயல் அலுவலர் பாலமுருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட அயன் குறிஞ்சிப்பாடி தாழை ஓடையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், பேரூராட்சி துணைத்தலைவர் ராமர், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் வெங்கடேசன், பேரூராட்சி செயல் அலுவலர் பாலமுருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### காஷ்மீரில் கண்ணிவெடித் தாக்குதல் –

# 2 ராணுவ வீரர்கள் வீர மரணம்!

ஜம்மு, பிப். 12 -

காஷ்மீரில் கண்ணி வெடி தாக்குதல் 2 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் உள்ள அக்னூர் செக்டார் அருகே பட்டல் என்ற பகுதியில் ராணுவ வீரர்கள் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக அங்கு பதுக்கி வைக்கப் பட்டிருந்த கண்ணிவெடி வெடித்து சிதறியது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 3 ராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், சிகிச்சை பெற்று வந்த கேப்டன் உட்பட 2 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர் என்ற தகவலை இந்திய ராணுவத்தின் ஒயிட் நைட் கார்ப்ஸ் படைப்பிரிவினர் உறுதிசெய்தனர். எல்லைப் பகுதியில் கடந்த 4 நாளில் நடைபெற்ற 3வது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணிவெடியை பதுக்கி வைத்த பயங்கரவாதிகள் யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

### கல்வி உதவித்தொகை ரத்து, வக்பு சட்டத்திருத்த மசோதா மூலம்

# சிறுபான்மையினரை கல்வி, பொருளாதார ரீதியாக ஒடுக்க ஒன்றிய அரசு முயற்சி!

## மக்களவையில் கே.நவாஸ்கனி எம்.பி. பேச்சு!

புதுடெல்லி, பிப்.12-

கல்வி உதவித்தொகை ரத்து, வக்பு சட்டத்திருத்த மசோதா மூலம் சிறுபான்மையினரை கல்வி, பொருளாதார ரீதியாக ஒடுக்க ஒன்றிய அரசு முயல்வதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத்தலைவரும், இராமநாதபுரம் மக்களவை தொகுதி உறுப்பினருமான கே.நவாஸ்கனி எம்.பி., தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் நிதிநிலை அறிக்கை 2025-26 மீதான விவாதத்தில் நேற்று அவர் பேசியதாவது:

நிதிநிலை அறிக்கை 2025-26 மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**பாரபட்சமான நிதி பகிர்வு**

ஒன்றிய அரசின் இந்த நிதிநிலை அறிக்கை வார்த்தை ஜாலங்களால், பாரபட்சமான நிதி பகிர்வாக அமைந்திருக்கிறது. நிதியமைச்சர் அவர்கள் வாசித்தது பாஜக வின் தேர்தல் அறிக்கை அல்ல, நாட்டின் நிதிநிலை அறிக்கை. தேர்தல் வரும் மாநிலங்க ளுக்கு ஒரு முக்கியத்துவமும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு பாரபட்சமாக மாற்று பார்வையும் கொண்ட பட்ஜெட் ஆக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது,

பீகார் மாநிலத்திற்கு தேர்தல் வர இருப்பதால் பல திட்டங்களை வாரி வழங்கிய ஒன்றிய அரசு, தமிழ்நாடு முன்வைத்த நெடுஞ்சாலை, ரயில்வே திட்டங்கள் எங்களுடைய தமிழ்நாடு முன்வைத்த நெடுஞ்சாலை திட் டங்கள், ரயில்வே திட்டங்கள், கோவை மதுரை மெட்ரோ ரயில் நிதி, மதுரை எய்ம்ஸ் நிதி என எதைப் பற்றியும் வாய் கூட திறக்காதது உள்ளபடியே எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி. நீங்கள் ஆளும் மாநிலங் களுக்கு அள்ளிக் கொடுக்க நீளும் உங்கள் கரங்கள், எங்கள் மாநிலங்களுக்கு மட்டும் கிள்ளி கூட கொடுக்க மறுப்பது எந்த வகையில் நியாயம் என்று தான் கேட்கின்றோம்.

உங்கள் அரசியலுக்காக தமிழ்நாட்டை பயன்படுத்தும் நீங்கள், நிதிப்பகிர்வில் மட்டும் ஏன் புறக்கணிக்கிறீர்கள் என்று தான் கேட்கின்றோம். தேர்தல் வரும் போது மட்டும் தான் எங்கள் தமிழ் மக்கள் உங்கள் கண்களுக்கு தெரிவார்களா? அரசியல் செய்வதற்கு மட்டும்தான் தமிழ்நாடு உங்கள் கண்களுக்கு புலப்படுமா? மக்கள் மீதான கருணையும் அக்கறையும் சொல்லில் அல்ல செயலில் காட்டுங்கள்.

**மும்மொழி கொள்கை**

தேசிய கல்விக் கொள்கை யையும் அதன் அடிப்ப டையில் மும்மொழி கொள்கையையும் திரிக்க நினைக்கும் உங்களின் வஞ்சகமான நோக்கத்தை நிராகரித்த ஒரே காரணத் திற்காக அப்பட்ட மான அச்சுறுத்தலை எங்கள் தமிழ் நாட்டிற்கு விடுத்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் எங்கள் மாணவர்களுடைய 2152 கோடி பறித்து வேறு மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளீர்கள்.

வளரும் தலைமுறையின் வளர்ச்சியில் கை வைக்கும் உங்களுடைய செயலை வரலாறு ஒரு போதும் மறக்காது, மன்னிக்காது. நிதித்தர மறுத்து உங்கள் கல்விக் கொள்கையையும் மொழி திருப்பியும் எங்கள் மீது திணிக்க பார்க்கிறீர்கள். இத்தகைய அச்சுறுத்தலுக்கு எல்லாம் அஞ்சு மாநிலம் தமிழ்நாடு என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் முன்னோர்களை கேட்டு பாருங்கள் இந்தி திணிப்பு போராட்டத்தின் வீரியத்தை உங்களுக்கு சொல்வார்கள். எங்களை அச்சுறுத்தும் நோக்கத்தில் எவர் வந்தாலும் அவர்களை தமிழ்நாட்டின் வரலாற்றில் இருந்து துடைத் தெறிந்த வரலாறு இருக்கிறது.

**பூனையைக் காட்டி யானையை மறைக்கின்ற செயல்**

இந்த நிதிநிலை அறிக்கை பூனையைக் காட்டி யானையை மறைக்கின்ற செயலை செய்கின்றது. வருமானவரிச் சலுகையை கொடுத்து, மறைமுகமான வரிச் சுமைகளையும் விலைவாசி ஏற்றத்தையும் அடித்தட்டு மக்கள் தலையில் சுமத்துகிறது. இந்த வரிச்சலுகையில் மூலமாக கிட்டத்தட்ட 2 கோடி பேர் மட்டும் தான் பயனடைவார்கள். 140 கோடி மக்கள் தொகை இருக்கும் நாட்டில் 138 கோடி மக்கள் பயன்படக் கூடிய வகையில் விலைவாசியை குறைப்பதற்கான எந்த சிறப்பு திட்டங்களும் இல்லை, வேலைவாய்ப்பு திண்டாட்டம் தலை விரித்து ஆடுகிறது அதற்கு எந்த மாற்று திட்டங்களும் இல்லை, பெட்ரோல் டீசல் விலை குறைப்பிற்கான எந்த அறிவிப்பும் இல்லை, உர மானியம் எரிபொருள், கேஸ் சிலிண்டர் மானியம் உள் ளிட்ட மானியங்கள் எல்லாம் குறைப்பு,

**அடித்தட்டு மக்களின் தலையில் சுமை**

இப்படி அனைத்து தரப்பட்ட அடித்தட்டு மக்களின் தலையில் சுமையை ஏற்றிவிட்டு வருமானவரிச் சலுகை தருகின்றோம் என மக்களை திசை மாற்றுவதெல்லாம் மக்களை ஏமாற்றும் செயல். அடித்தட்டு கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் மிக முக்கிய பங்காற்றக்கூடிய திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை அடித்தட்டு மக்க ளின் மீது அக்கறை கொண்ட காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது. கார்ப்பரேட்டுகளின் மீது மட்டும் அக்கறை கொண்ட பாஜக அரசு இன்று அதை சிறுக சிறுக அளித்துக் கொண்டிருக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான தொகை ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் குறைக்கப்பட்டு கொண்டே வருவது அடித்தட்டு கிராமப் புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்க கூடிய செயல். கிராமப்புறங்களை நகர்ப்புறத்தோடு இணைப்பதற்கு பேரூராட்சிகளோடு இணைப்பதற்கு கூட தற்போது அந்தப் பகுதி கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்று சொன்னால் அதற்கு இந்த வேலை உறுதித் திட்டம் பறிபோகிவிடும் என்ற எண்ணத்தில் தான். அந்த அளவிற்கு அவர்களின் வாழ்வாதாரத் திற்கு உதவும் இந்த திட்டத் திற்கு நிதியை ஆண்டு தோறும் குறைப்பது ஏற்புடையதல்ல அந்த நிதியை அதிக படுத்த வேண்டும். ஊதியத்தையும் அதிகப் படுத்தி வழங்க வேண்டும்.

சிறுபான்மை மக்களுக்கு எதிரான பார்வையை பாஜக அரசு கடந்த 10 ஆண்டு காலம் தொடர்ந்து விரிவாக்கிக் கொண்டே தான் சென்று கொண்டிருக்கிறது. அதற்கு இந்த நிதி நிலை அறிக்கையும் விதிவிலக்கு இல்லை என்ற வகையில் சிறுபான்மை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை தொடர்ந்து குறைக்கப்பட்டு கொண்டு வருவதிலிருந்து நாம் பார்க்க முடிகிறது.

பட்டியல் சமூகத்திற்கும் பழங்குடியினருக்கும் சிறு பான்மை மாணவர்களுக்கும் வழங்கப்படும் பிரீ மெட்ரிக் ஸ்காலர்ஷிப் போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் என்ற கல்வி உதவித்தொகைகள் கடந்த நிதிநிலை அறிக்கையில் 6,360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 760 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. வெளிநாடுகளில் பயிலக் கூடிய மாணவர்களுக்கான ஓவர்சீஸ் ஸ்காலர்ஷிப்பிற்க்கு மிக சொற்பமான தொகை மட் டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மௌலானா அபுல் கலாம் ஆசாத் எஜுகேஷன் பவுண்டேஷன் கல்வி உதவித்தொகை ஆராய்ச்சி படிப்பிற்கான கல்வி உதவித்தொகை முற்றிலு மாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மௌலானா அபுல் கலாம் ஆசாத் எஜுகேஷன் பவுண்டேஷன் கல்வி உதவித் தொகை இந்த அரசால் முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. சிறுபான்மை மாண வர் கள் ஆராய்ச்சி கல்வி கற்பதை இந்த அரசு விரும்பவில்லையோ என்ற சந்தேகம் எழுகிறது. எதற்காக இந்த பாரபட்சம் எதற்காக சிறுபான்மை மக்க ளின் கல்வியில் கை வைக் கிறீர்கள்.

சிறுபான்மை மாணவர்களுக்கான பிரீ மெட்ரிக் ஸ்கா லர்ஷிப் கடந்த நிதியாண்டில் அறிவித்த 326 கோடி ரூபாயில் வரும் 90 கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்திருக்கிறீர்கள், இந்த நிதி ஆண்டில் வரும் 195 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் கடந்த நிதி ஆண்டில் 1145 கோடி அறிவிக்கப்பட்டு அதில் வெறும் 344 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டது தற்போது அந்த கல்வி உதவித் தொகையையும் 413.9 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி சிறுபான்மை மாணவர்களின் கல்வியில் கை வைக்க கூடிய அரசாக இந்த அரசு இருக்கின்றது.

கல்வி ரீதியாகவும் சிறுபான்மை கல்வியில் தாக்குதலை ஏற்படுத்துகிறது, பொருளாதாரரீதியாகவும் சிறுபான்மையினர் உடைய பொருளாதாரத்தை கை வைக்க கூடிய வக்ஃபு திருத்த சட்டத்தை இந்த அரசு கொண்டுவர நினைக்கிறது.

ஏற்கனவே இருக்கக்கூடிய வக்ஃபு சட்டங்களின் மூலமாக நாங்கள் எந்த வகையில் பாதிக்கப்பட்டு கொண்டிருக் கின்றோம் என்பது குறித்து ஆராய்ந்து, அதற்கு எந்த தீர்வையும் இந்த அரசு கொண்டு வரவில்லை, ஏற்கனவே நாங்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கக்கூடிய சொத்துக்களை மேம்படுத்துவதற்கு இருக்கக் கூடிய திட்டங்களின் மூலமாக வக்புகளை மேம்படுத்துவதற்கு 2 கோடி ரூபாய் வரைக்கும் கடன் உதவி அளிக்கக்கூடிய திட்டம் இருந்தது.

நான் தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராக பொறுப் பேற்றவுடன் அந்தத் திட்டத்தின் மூலமாக பயன் படக்கூடிய மாநிலங்கள் எத்தனை, எந்தெந்த மாநி லங்கள் அந்த திட்டத்தில் பயனடைந்துள்ளன என்று கேட்ட போது, கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த கடன் உதவி அளிக்கப்படவில்லை என்றார்கள், ஏன் என்று சொன்னால் அந்த திட்டம் சென்ட்ரல் வக்ஃபு கவுன்சில் ஒப்புதலின் மூலமாக தான் பெற முடியும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த சென்ட்ரல் வக்ஃபு கவுன்சில் அமைக்கப்படவே இல்லை. அந்தத் திட்டத்தின் மூலம் யாருக்கும் இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இப்படி சிறுபான்மையினரின் வக்ஃபு நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு எந்த திட்டத்தையும் செய்யாமல், ஏற்கனவே இருக்கக்கூடிய சொத்துக்களை மேம்படுத்துவ தற்கும், வாடகைக்கு இருப்பவர் களிடம் கூடுதலாக அந்த வருமானத்தை வாங்குவதற்கும், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து அந்த சொத்துக்களை மீட்பதற்கான எந்த திட்டமும் இல்லாமல், வக்பு சொத்துக்களை ஆக்கிரமிக்க கூடிய வகையில் வக்பு திருத்த மசோதாவை இந்த அரசு கொண்டு வருவது சிறுபான்மை மக்களை கல்வி ரீதியாகவும் ஒடுக்க வேண்டும், பொருளாதார ரீதியாகவும் கொடுக்க வேண்டும் என்கின்ற ஒரே நோக்கம்தான். ஒன்றிய அரசு தன்னுடைய திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்குத் தொகையை தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருகிறது. இதனால் மாநில அரசின் நிதி சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால் பெயர் மட்டும் ஒன்றிய அரசின் திட்டம் என்ற பெயர்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டம் பாஜக அரசு தொடர்ந்து நாடு முழுவதும் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தை பெரும் சாதனையாக குறிப்பிடுகிறார்கள். தற்போது கூட நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களின் உரையில் மூன்று கோடி வீடுகளை புதிதாக கட்டப் போவதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் வெறும் விளம்பரத்தை மட்டும் பெற்றுக்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசு அந்தத் திட்டம் எப்படி செயல்படுகிறது என்பது குறித்து எந்த அக்கறையும் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த திட்டத்திற்கு கடந்த நிதிநிலை அறிக்கையில் 54 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது அதில் 32,400 கோடி மட்டுமே செலவிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 22,100 கோடி ரூபாய் செலவிடவே படவில்லை. இதனால் பிரதமரின் வீடு கட்டும் திட்டம் முறையாக நிறைவேற்றப்பட முடியவில்லை. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் பணம் என்பது ஒரு வீடு கட்டுவதற்கு ஒன்றிய அரசு 1,11,100 ரூபாய் மட்டுமே வழங்குகிறது, மாநில அரசு 1,72,900 ரூபாய் வழங்குகிறது. இப்படி இருக்கும் நிலையில் ஒரு வீடு கட்டுவதற்கு 2,83,900 ரூபாய் மட்டுமே ஒதுக்கப்படுகிறது.

இந்த நிதியில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஒரு வீட்டினை முழுமையாக கட்டி முடிக்க முடியாது. இன்று இருக்கக்கூடிய கட்டுமான பொருட்கள் உடைய விலை சிமெண்ட் விலை, செங்கலினுடைய விலை, இரும்பு கம்பியின் விலை இவையெல்லாம் நம்மு டைய நிதி அமைச்சருக்கு தெரியுமா என கேட்கின்றேன். பிரதமரின் வீடுகட்டும் திட்ட நிதியை ரூ. 5 லட்சமாக உயர்த்த வேண்டும் இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிக்கு ஏற்றார் போல் அந்த நிதியை 5 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

எங்களுடைய தமிழ் நாடு அரசு எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞரின் கனவு திட்டம் என்ற திட்டத்தின் கீழ் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டி தருவதற்கான திட்டத்தை அறிவித்திருக்கிறார். அப்படி முன்மாதிரி முதலமைச்சராக எங்களுடைய முதலமைச்சர் இருக்கின்றார்.

மூன்று கோடி வீடுகள் என்று வெற்று அறிவிப்பு இல்லாமல், 2 கோடி என்று குறைத்துக் கூட அந்த திட்டத்திற்கான தொகையை அதிகப்படுத்தி வழங்க வேண்டும். பாஜக அரசு தன்னுடைய பாரபட்சமான பார்வையை நிறுத்திக் கொண்டு நாட்டின் அனைத்து மாநிலங் களையும் ஒரே பார்வையில் பார்த்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அடுத்த தேர்தலை மட்டுமே முன்வைத்து தேர்தல் அரசியல் செய்யாமல் அடுத்த தலைமுறையை முன்வைத்து ஆக்கப்பூர்வமான அரசியலை ஒன்றிய அரசு முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே. நவாஸ் கனி எம்.பி., பேசினார்.



### புரசைவாக்கம் நெடுஞ்சாலையில்

# குடிநீர் பிரதானக் குழாய் இணைக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, பிப்.12

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 14.02.2025 அன்று காலை 10.00 மணி முதல் 15.02.2025 அன்று காலை 10.00 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் 5, 6, 8, 9 மற்றும் 10 - க்குட்பட்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் என்று சென்னை குடிநீர் வாரியம் தகவல் வெளியிட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 14.02.2025 அன்று காலை 10.00 மணி முதல் 15.02.2025 அன்று காலை 10.00 மணி (24 மணி நேரம்) மண்டலம் 5, 6, 8, 9 மற்றும் 10 - க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் - 5 (இராயபுரம்) - புரசைவாக்கம், பெரியமேடு, சௌகார்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிபேட்டை.

மண்டலம் - 6 (திரு.வி.க. நகர்) - ஓட்டேரி, அயனாவரம், பெரம்பூர், செம்பியம்.

மண்டலம் - 8 (அண்ணா நகர்) - கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ்.

மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) - சேப்பாக்கம், திருவல்லிக்கேணி.

மண்டலம் - 10(கோடம்பாக்கம்) - தி.நகர், சைதாப்பேட்டை.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பி.சக்திவேல் ராஜ் – சி. சிவரஞ்சனி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 10.2.2025 மாலை பூவிருந்தவல்லி எஸ்.வி.வி. கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.இதில் காஞ்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் மற்றும் கழக மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.